**கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட்ட கோரள பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 04 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட கோரள பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) வெளிவாரி நிதிஏற்பாடுகளின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த 14 நிர்மாண வேலைக்குரிய ரூபா 730,615 ஆன நிறுத்தி வைத்தல் பணம் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்த 03 நிர்மாண வேலைக்குரிய பணம் 2015 மார்ச் 24 ஆந் திகதி கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 1,255,018 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டில் வெளிவாரி நிதிஏற்பாடுகளின் கீழ் செயற்படுத்தவதற்காக மதிப்பீடு செய்து பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்த ரூபா 10,049,000 கூட்டுப்பெறுமதியான 38 நிர்மாண வேலைகள் கடன்கொடுத்தோரின் கீழும் கடன்பட்டோரின் கீழும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் ரூபா 3,000,000 பெறுமதியான 02 மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்கு கூறுவிலை கோரப்பட்டிருந்த போதிலும் பொருட்களை கட்டளையிடுவதற்கு அல்லது பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் அப்பெறுமதி கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்து களஞ்சிய கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டமையால் பொது களஞ்சிய மீதி மற்றும் பொறுப்புக்கள் ரூபா 3,000,000 தொகையால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

08 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகார் மீதிகள் கூட்டுத்தொகை ரூபா 21,775,745 ஆக இருந்த போதிலும் பயன்பாட்டு பட்டோலையின் பிரகாரம் அம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,120,340 ஆக இருந்தமையால் ரூபா 1,665,403 தொகையான இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 124,786,190 ஆக காணப்பட்டது. அவற்றில் 5 வருட காலத்திற்கு மேற்பட்ட கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 15,342,421 ஆக காணப்பட்டது. 01 வருடத்திற்கு 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 57,379,514 ஆக இருந்தது. 2018 யூலை 24 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 120,993,080 ஆன மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 48,106,550 ஆன செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதியில் 05 ஆண்டு காலம் கடந்திருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 884,414 ஆக இருந்ததுடன், 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய நிலுவை கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 21,439,853 ஆக இருந்ததுடன், 2018 யூலை 24 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 33,922,254 ஆன மீதியொன்று மேலும் செலுத்த வேண்டியிருந்தது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை**

(அ) 04 கணக்கு விடயங்களுக்குரிய பதிவேடுகள் மற்றும் கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 13,695,802 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

(ஆ) ரூபா 6,487,162 பெறுமதியான நீர்க் களஞ்சிய உபகரண மீதியொன்று நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன் பெறுமதி மற்றும் அளவுகள் உறுதிப்படுத்தப்படும் வகையில் நீர்க் களஞ்சிய பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் நீர்த்தாங்கிகள் இருந்த 172 நீர்க் குழாய் உபகரண உருப்படிகளின் பெறுமதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.3.5 இணக்கமின்மைகள்**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 218 | | காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் கணிப்பீடொன்று மேற்கொள்ளபட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(2) | 8,692 | வழங்கப்பட்டிருந்த முற்பணம் உரிய செயற்பாடு முடிவடைந்தவுடனேயே தீர்வுசெய்யப்பட வேண்டிய போதிலும் 2007 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த முற்பணத்தை |

தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 25,345,908 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 54,622,205 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 8,726,970 | 8,562,664 | 8,729,462 | 7,518,534 | 9,677,160 | 10,182,831 | 11,340,941 | 7,685,333 |
| (ii) | வாடகை | 815,000 | 564,000 | 564,000 | 495 | 1,610,000 | 570,400 | 711,400 | 495 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 3,906,000 | 1,123,099 | 1,123,099 | -- | 3,705,000 | 3,113,911 | 3,113,911 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 37,518,000 | 23,187,062 | 31,786,671 | 84,656,882 | 66,162,000 | 58,483,525 | 98,792,021 | 89,129,069 |
| | மொத்தம் | 50,965,970 | 33,436,825 | 42,203,232 | 92,175,911 | 81,154,160 | 72,350,667 | 113,958,273 | 96,814,897 |

#### 2.2.2 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

ஒட்டுமொத்த வருமான விடயங்களிலிருந்து 2016 திசெம்பர் 31 உள்ளவாறு நிலுவை ரூபா 96,814,897 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அப்பெறுமதி ரூபா 92,175,911 ஆக இருந்தது.

#### 2.2.3 வீதவரி வரிகளும்

**(அ) ஆதன வரி**

(i) வருடக் கணக்காக அரச நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 581,998 ஆன வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1993-2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனியார் ஆதன உரிமையாளர்களுக்குரிய 350 வீதவரி அலகுகளில் நிலுவை வீத வரி மீதி ரூபா 1,524,572 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 159 பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2017 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 7,608,345 ஆக இருந்ததுடன், 2017 திசெம்பர் வரை பட்டியலிடல் ரூபா 8,079,199 ஆக இருந்தது. 2017 திசெம்பர் மாதம் வரை நிலுவையிலிருந்தும் பட்டியலிடலிருந்தும் முறையே ரூபா 3,357,618 மற்றும் ரூபா 4,888,173 இருந்தது. அது சதவீதமாக 44 சதவீதம் மற்றும் 61 சதவீதமாக இருந்ததுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 7,441,753 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

**(ஆ) ஏக்கர் வரி**

2017 சனவரி 01 இல் உள்ளவாறு ஏக்கர் வரி ரூபா 17,037 ஆக இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்நிலுவையில் ரூபா 160 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. இது 0.9 சதவீதமாகும். இதன் பிரகாரம் நிலுவை வரி அறவீடு மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டிய 03 கைத்தொழில்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாதிருந்ததுடன் இதன் காரணமாக சபை நிதியத்திற்கு ரூபா 12,000 தொகை இழக்கப்பட்டிருந்தது.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,264,558 உம் முத்திரைக் கட்டணம் ரூபா 82,392,324 உம் அறவிடப்பட வேண்டியிருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) உப விதிகள்

மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போது பெக்கோ இயந்திரத்தை வாடகைக்கு வழங்குதல், விளையாட்டரங்கு மற்றும் சனசமூக மண்டபம் ஒதுக்கீடு என்பவற்றுக்காக ரூபா 866,600 மற்றும் ரூபா 162,000 ஆன வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்த போதிலும் உப விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நோக்கத்திற்கு புறம்பான செயற்பாடுகள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 22 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு 03 ஆம் இலக்க நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 304-3 செலவின விடயம் வடிகாண் திருத்தம் மற்றும் பராமரிப்பிற்காக மீளாய்வாண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 300,000 ஆன

மொத்த நிதிஏற்பாடும் 304-4 செலவின விடயமான வீதிகள் மற்றும் பாதசாரிகள் போகும் வீதி திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பிற்கான ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 500,000 ஆன நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 483,000 நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டு உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

(இ) எதிர்பார்க்கப்பட்ட நிறைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 78(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டில் பொது சுகாதார நிகழ்ச்சித்திட்ட இலக்கம் 02 இன் கீழ் 205-7 செலவின விடயம் சுகாதார மற்றும் ஆரோக்கிய நலன் சேவைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 75,000 நிதிஏற்பாடு மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்டு உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

2015 ஆம் ஆண்டின் போது ரூபா 480,000 செலவு செய்து மத்தேபனத மயானத்தில் உயிரியல் வாயு செயற்திட்டம் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் 2018 யூன் 20 ஆந் திகதி வரையிலும் உயிரியல் வாயு உற்பத்தி செய்யப்படாமல் உரிய செயற்திட்டம் இடைநடுவில் விடப்பட்டிருந்தது.

(உ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

(i) சபை நிதியத்திலிருந்து செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 38 நிர்மாண வேலைகளுக்காக அறிக்கை தயாரிக்கப்பட்டு 2017 மார்ச் 21, யூன் 29, செப்தெம்பர் 28 மற்றும் நவம்பர் 16 ஆந் திகதிகளில் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டு 2017 யூன் 17, ஆகஸ்ட் 16, நவம்பர் 09 மற்றும் திசெம்பர் 19 ஆந் திகதிகளில் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டின் போது செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஆண்டின் இறுதிவரை செயற்திட்டங்கள் அங்கீகரிக்கும் செயற்பாடு இடம்பெற்றமை காரணமாக செயலாற்றல் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

(ii) அங்கீகரிக்கப்பட்ட ரூபா 3,950,000 பெறுமதியான 11 அபிவிருத்தி முன்மொழிவுகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) திண்மக்கழிவு பொருள் முகாமைத்துவம்

நாளாந்தம் 3 தொன் கழிவுப்பொருட்கள் சேர்வதுடன், பிரதேச சபைக்கு சொந்தமான கழிவுப்பொருட்களை வெளியேற்றுவதற்காக காணியொன்று இல்லாமை காரணமாக 01 தான் உக்கும் கழிவுகளுக்கு ரூபா 500 வீதம் கொடுப்பனவு செய்து குண்டகசாலை பிரதேச சபையிடமுள்ள கழிவுப்பொருள் பிரிவிற்கு வெளியேற்றப்பட்டு வந்தன. இதற்காக வருடமொன்றுக்கு ரூபா 540,000 அளவில் மேலதிக செலவினமொன்று இடம்பெறுவதுடன் சபையினால் கழிவுப்பொருட்களை மீள்சுழற்சிப்படுத்த அல்லது மீண்டும் பயன்படுத்தக்கூடிய வகையில் வேலைத்திட்டமொன்றுடன் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**(எ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

(i) நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 "நிகழ்ச்சிநிரலின்" பிரகாரம், ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டியதுடன், மீளாய்வாண்டில் கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட கோரள பிரதேச சபையினால் தமது விடயப் பரப்பின் கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்படுத்துவது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

(ii) அச்செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகுள் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்துகொள்வதில் அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஏ) கூட்டிணைந்த திட்டம்**

(i) நிறுவனத்தின் சகல பிரிவுகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒட்டுமொத்த நடவடிக்கைகளுக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் 2017 முதல் 2020 வரை தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தில் அபிவிருத்தி செயற்திட்டங்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ii) அபிவிருத்திக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் 31 நிர்மாண வேலைகளை செயற்படுத்தவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதில் 07 நிர்மாணங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

(அ) சபையினால் பேணிச் செல்லப்பட்டிருந்த கீழ் முன்மொழிவு முறைமைக்காக 03 சந்தர்ப்பங்களின் போது கண்டி மாநகர சபையில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 265,000 ஆன வைப்புத்தொகை மற்றும் அதற்காக மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்காக இலங்கை மின்சார சபையின் 02 சந்தர்ப்பங்களின் போது வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 7,500 ஆன வைப்புத் தொகையை மீளப்பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது வரி அறவிடக்கூடிய பிரதேசங்களாக 4844 அலகுகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அந்த ஆதனங்களுக்காக வீதவரி அறவிடுவதற்கு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 74,021,557 பெறுமதியான 11 காணி மற்றும் கட்டிடங்கள் உருப்படிகளின் காணி கட்டிடங்களின் பெறுமதி வெவ்வேறாக நிலையான சொத்துப் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் நிதிப் பொறுப்பாளரான சிராப்பர் உத்தியோகத்தருக்கு முற்பணம் வழங்கும் இயலளவு இல்லாதிருக்கையில் மற்றும் முன்னர் பெற்றுக்கொண்ட முற்பணங்கள் தீர்வு செய்யாதிருக்கையில் தொடர்ந்தும் வெவ்வேறு செயற்பாடுகளுக்காக முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே நிதிப்பிரமாணம் 371(2)(அ) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் மிகவும் தாமதமாக முற்பணம் தீர்க்கப்பட்டிருந்தது.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கைக்கு இடையே 14 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத அமைய காவலாளி ஒருவர் மற்றும் மிகை முன்பள்ளி உதவியாளர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) 2017 மே 06 ஆந் திகதிய CPC/UCG/2/5 கணக்காய்வு என்ற உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் கடிதத்தினால் தொழிலாளர் தரங்களில் ஊழியர்களின் அலுவலக நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறு உள்ளூராட்சி மன்ற நிறுவன அறிவூட்டப்பட்டிருக்கையில் அலுவலக தொழிலாளர், வெளிக்கள தொழிலாளர் மற்றும் சுகாதார தொழிலாளர் பதவிகளை வகிக்கும் 09 பேருக்கு அலுவலக ரீதியான வெவ்வேறு விடயங்களுக்குரிய பொறுப்பான கடமைகள் வழங்கப்பட்டிருந்தன.

### 3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை

05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை வீதவரி மதிப்பீடு செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் 08 ஆண்டுகள் கடந்திருக்கையில் 2008 ஆம் ஆண்டின் வீதவரி மதிப்பீடு அடிப்படையில் 2017 ஆம் ஆண்டிலும் வீதவரி அறவிடப்பட்டிருந்தது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சொத்துக்கள் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

சபைக்கு சொந்தமான வாகனங்களை நிறுத்திவைக்க கூடிய வளாகம் ஒன்று இல்லாமையால் சபைக்கு சொந்தமான வாகனங்கள் இயற்கை அழிவுகளுக்கு உட்பட்டு வந்தன.

#### 3.5.2 கையேற்படாத சொத்துக்கள்

சபை பயன்படுத்தும் ரூபா 24,519,426 பெறுமதியான காணி, கட்டிடங்கள், விளையாட்டரங்கு, மயானங்கள் மற்றும் 77 சனசமூக மண்டபங்கள் என்பவற்றுக்காக சட்டரீதியான உரித்தை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.3 விளைவற்ற / குறைப்பயனபாட்டிலான சொத்துக்கள்

(அ) ரூபா 2,290,000 பெறுமதியான 03 வாகனங்கள் 01 வருடத்திற்கும் 02 வருடங்களுக்கும் இடையிலான காலப்பகுதியில் திருத்தம் செய்யப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) பெறுமதி கணிப்பிடப்படாத 172 குழாய் நீர் உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி, மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவினங்கள், உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் 04 வருமான விடயங்களில் 23 சதவீதம் முதல் 102 சதவீதம் வரையிலும் 06 செலவின விடபங்களில் 16 சதவீதம் முதல் 67 சதவீதம் வரையும் முரண்கள்

அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 134(3) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிவல்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | இருப்புக்கள் | i. இருப்பு உருப்படிகள் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாமை.<br>ii. பழைய நீர் உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டமை. |
| (ஆ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | i இரத்துச் செய்யப்பட்ட நிர்மாண வேலைகளுக்காக கடன்கொடுத்தோர் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டமை<br>ii. கடன்கொடுத்தோர் இரட்டிப்பாக பதியப்பட்டமை<br>iii. பழைய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) | சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள் | i பதிவேடுகள் முறையற்ற வகையில் காணப்படல்<br>ii. பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை<br>iii. சொத்துக்கள் வெவ்வேறாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படாமை. |
| (ஈ) | ஊழியர் முகாமைத்துவம் | i வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாமை<br>ii. ஊழியர்களை உரிய பதவிகளில் சேவையில் ஈடுபடுத்தாமை |